83—

நியாய விலைக் கடை

***458—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, மலைப் பகுதியான சித்தேரி மலையில் பழங்குடியின மலைவாழ் மக்கள் வாழும் வெனாம்பள்ளி கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. புத்திசந்திரன், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதியில் உள்ள சித்தேரி லேம்ப் சங்கம் நடத்தும் சூரியன்கடையில், சூரியக்கடை / வெனாம்பள்ளி / ஜொல்லூத்து ஆகிய மூன்று கிராமங்களின் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் வெனாம்பள்ளி மற்றும் ஜொல்லூத்து கிராமங்களின் 118 குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது நடமாடும் ஊர்திமூலம் குடிமைப் பொருட்கள் பிரதி மாதம் முதல் வாரத்தின் செவ்வாய்க் கிழமையில் வழங்கப்படுகிறது. எனினும், மேற்குறிப்பிட்ட 118 குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளை, நிபந்தனைகளைத் தளர்த்தி, வெனாம்பள்ளி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட சித்தேரி பஞ்சாயத்து சுமார் 424 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக்கொண்டு 63 கிராமங்களை*

2011 செப்டம்பர் 5]

உள்ளடக்கிய ஒரு பஞ்சாயத்து ஆகும். நான் கேட்டிருக்கக்கூடிய வெனாம்பள்ளி கிராமத்திலுள்ள மக்கள் ரேஷன் கடைக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், 8 கிலோ மீட்டர் தூரம் பேரேரிப்புதூருக்கும், 10 கிலோ மீட்டர் தூரம் சித்தேரிக்கும் செல்லவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கக்கூடிய பகுதிநேர நடமாடும் ரேஷன் கடைகூட மாதத்தில் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ வருகின்றபட்சத்தில் அங்குள்ள மக்கள் பொருட்களை வாங்க இயலாமல் போகின்ற அவலநிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. ஜொல்லூத்து, வெனாம்பள்ளியில் 132 கார்டுகள் இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, ஏறக்குறைய 8 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டுமென்றால், ஒரு நாள் வேலையைவிட்டு மலைவாழ் மக்கள் செல்லவேண்டும். அதுபோல விலையில்லா 20 கிலோ அரிசி மற்றும் விலையுள்ள அரிசியைச் சேர்த்து 50 கிலோ அரிசியைச் சுமந்து 8 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டிய அவல நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆணையோடு பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். இப்படி 8 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்ற மலைப் பகுதி கிராமங்களுக்குச் சிறப்பு நிகழ்வாகக் கருதி, ஒரு பகுதியில் 100, 120 அல்லது 130 கிராமங்கள் இருந்தாலும்கூட, பகுதிநேரக் கடைகளை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "சிறப்பு நேர்வாகக் கருதி நியாய விலைக் கடையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?" என்று உங்களுக்காக நானே கேள்வியைக் கேட்டு முடிக்கிறேன். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. புத்திசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதுபோல, அரூர் தொகுதிக்குட்பட்ட சித்தேரி லேம்ப் சங்கம் நடத்தும் சூரியன்கடை நியாய விலைக் கடையில் தற்போது 556 குடும்ப அட்டைகளுடன் வாரத்தின் அனைத்து நாட்களிலும் செயல்பட்டு வருகின்றது. இதில் சூரியக்கடையிலிருந்து 6 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வெனாம்பள்ளி மற்றும் 7 கிலோ மீட்டர்

தூரத்திலுள்ள ஜொல்லூத்து கிராமங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அல்ல, 118 குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது நடமாடும் ஊர்திமூலம் குடிமைப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டு, பிரதி மாதம் முதல் வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்படின், அந்தத் தாய்க் கடையில் 438 அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். இருப்பினும் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, நிச்சயமாகப் பகுதிநேரக் கடை அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

84—

பன்முக மருத்துவமனை

***6441—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பெருந்துறை வட்டத்தில் அனைத்து வசதிகளுடன் 24 மணி நேரமும் இயங்கும் கால்நடை பன்முக மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) பெருந்துறை தொகுதி, பெருந்துறை வட்டத்தில் ஒரு கால்நடை பன்முக மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறு உள்ளது.

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*